RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1986

# சித்தர் இலக்கியங்கள் கூறும் அறக்கோட்பாடுகள்

சீ. புவனேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, அண்ணாநகர், சென்னை-600102, தமிழ்நாடு, இந்தியா

# Principles of Virtue in Siddha Literature

S. Bhuvaneswari [a, *]

[a] Department of Tamil, Valliammal College for Women, Anna Nagar, Chennai–600102 Tamil Nadu, India

* Corresponding Author: saibalajisaivishnu@gmail.com

Received: 01-07-2022
Revised: 08-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Siddhars brought many goods to the society and they have subtle intelligence. Siddhars what is good and what is not good for the welfare of the world. They have good thoughts. Siddhars paved the way for the people to win humanity through their songs. The foremost principles of Siddhars are the abolition of caste and opposition to superstitions. Siddhars controlled their wandering mind by their faith in God. Siddhar songs are written with the intention of reforming the society. This article is about the virtues that have been discussed in Siddha literary songs.

**Keywords:** Siddha Literature, Principles of Virtue, Good, Humanity

## முன்னுரை

சமுதாயத்தை நல்வழிப்படுத்திய சான்றோர்களில் ஒருவரே சித்தர்கள். அறத்தை வலியுறுத்திக் கூறும் பொழுது அவ் அறத்தினைப் பின்பற்றுவோரே பிறருக்கு நல்லுரைகள் கூற இயலும். அவ்வழியில் நின்ற தூயோரே சித்தர்கள். இவர்கள் தம் பாடல்கள் மூலம் மக்களிடையே மலிந்து கிடக்கும் அறியாமை இருளை அகற்றி பகுத்தறிவு தீபத்தைச் சுடர் விடச் செய்தனர். இன்ப துன்பங்கள் நிறைந்த வாழ்வில் சாதி சமய சாத்திரப் புயலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு ஞானத்தை ஊட்டினர். சாதி சமயப் பூசல்களையும் பொல்லாங்குகளையும் வெறுத்தொதுக்க வேண்டுகிறார்கள் சித்தர்கள். தீய குணம் உடையவர்களோடும் சேராதீர்கள் எனவும் சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர். மேலும் அவர்கள் சமுதாயத்திற்கு கூறும் அறநெறிக் கருத்துக்களே இங்கு ஆய்வுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சித்தர் சொற்பொருள் விளக்கம்

மனம், சொல், செயல், சிந்தனை ஆகிய அனைத்து நிலைகளிலும் தூய்மை நெறிநின்று இறை நம்பிக்கையோடு சமயம் சாத்திரம் சடங்கு முதலியவற்றிற்கு ஆட்படாமல் தம்முள் உறைந்திருக்கும் இறையை அறிந்து அதன்வழி அன்பையும் அருளையும் போற்றியவர்கள் சித்தர்கள். மரணமிலாப் பெருவாழ்வு பெற்று இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்களை யோகி, ரிஷி, முனி, குரு என்றும் கூறுவர் (Ramachandra sharma, 2012). மேலும் தேவ கணத்தினோர் திறத்தோர் சித்த பரமேஷ்டிகள் நந்தி நாதன் அருகன் புத்தன் குமரன் வைரவன் சிவன் இலவு என்று அகராதிகள் பலபொருள் கூறுகின்றன (Kalayana Sundaranar, 2012).

## தமிழ் இலக்கியங்களில் சித்தர்கள்

தம் நுண்ணிய அறிவுத் திறனால் முக்காலத்தை அறிவோர்களையும் தூய சிந்தனையுடன் உலகோர் நலன் கருதி நல்லவை அல்லாதவை எவை என்பதை பகுத்துணரச் செய்தவர்களை சித்தர்கள் எனலாம். தமிழ் இலக்கியங்களில் சித்தர் என்னும் தனியாக குறிக்கப்படவில்லையாயினும் அதற்கு இணையான பொருள் உணர்த்தும் சொற்கள் இடம் பெறுகின்றன. தொல்காப்பியத்தில் கூறப்படும் நிறைமொழி மாந்தர் திறவோர் காட்சியின் தெளிந்தனம் எனும் தொடர்கள் சித்தர்களின் இயல்பினை விளக்குகின்றது (Jeyaprakash, 2015).

## சித்தர் பாடல்களில் அறன்வலியுறுத்தல்

மனித நேயமே அறத்திற்கு அடிப்படையாகும். ஓவ்வொரு தனி மனிதனும் தன் மனதால் நேர்மையுடன் இருப்பதே அறம். அவ்வாறு அறத்தோடு வாழ்வோருக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் உரியதாகும். மேலும் அறமே இன்பத்தைத் தரும்.

காலங்காலமாக சான்றோர் கடிந்து கூறிய பொய், கொலை, களவு, காமம், இன்னாச் சொல் வன்முறை மூடபழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கடிந்த சித்தர்கள் மனித நேயம் சிறக்க தம் பாடல்களால் மக்களுக்கு நல்வழிப் பாதை அமைத்தனர். இவ்வாறு தாம் வாழவேண்டும் இவ்வாறெல்லாம் வாழக் கூடாது எனச் சில நெறிமுறைகளை வகுத்துக் காட்டினர். அவற்றின்படி வாழ்ந்தால் ஏற்படும் நன்மை தீமைகளையும் விளக்கியுரைத்தனர்.

“தான் என்ற ஆணவமும்

நல்லவர் தம்மை தள்ளாதே அறம்

நாளெட்டில் ஒன்றேனும் நாடித் தள்ளாதே

பொல்லாங்கில் ஒன்றுங் கொள்ளாதே கெட்ட

பொய்ம் மொழிக் கோள்கள் பொருந்தவிள்ளாதே.” (Jeyaprakash, 2015)

## மூட நம்பிக்கைகளை எதிர்த்தல்

சித்தர் தம் கொள்கைகளில் முதலாவதாகக் கருதப்படுவது சாதி யொழிப்பும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தலுமாகும். கோயிலும் குளமும் வேண்டாம் எல்லாம் நம் மனமே இதனை மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டாம் என்றும் மனத்தை யொட்டியே மனித நலம் சிறக்கும் என்றும் கூறினர். கோயிலும் குளங்களும் தேடி அலைந்து திரிவதும் இறைவன் இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் தேடி அலைந்து திரிவதும் அறியாமையின் விளைநிலமாகும். இதனையே சிவவாக்கியர் தம் பாடலில்

“கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா” (Arivoli, 2012)

எவையெல்லாம் செய்யலாகாது என்பதை கூறவிழையும் போது

“பத்தினி மார்களைப் பழித்துக்காட்டாதே

வேம்பினை யுலகிலூட்டாதே உன்றன்

வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே”

அதாவது உன் மனைவியை நீயே பழித்துக் காட்டாதே வேம்பு போல் கசந்த உணர்வை உலகிலுள்ளோர்க்கு உண்டாக்காதே உன் வீறாப்பை யாரிடமும் விளங்கும்படிச் செய்யாதே என்று பாடுகின்றார் (Arivoli, 2012).

“கஞ்சாப் புகையாதே - வெறி

காட்டி மயங்கியே கட்குடியாதே

அஞ்ச வுயிர்மடி யாதே - புத்தி

அற்ற அஞ் ஞானத்தின் நூல் படியாதே” (Arivoli, 2012)

## பொருளாசையை விலக்கல்

நிலையாமையைக் குறித்து சான்றோர் பலர் எடுத்துரைப்பினும் சித்தர் பார்வையில் அவை வெளிப்படும்போது அதன் உண்மை இன்னும் பல கோணங்களில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது (Susivalli, 2012).

நிலையற்ற பொருள்களில் மீது மனிதன் கொண்டுள்ள ஆசை அளவிடற்கறியது அதன்பால் செல்லும் மனத்தை தன் வயத்தால் இறை நம்பிக்கையால் கட்டுப்படுத்தியவர்கள் சித்தர்கள் தாம் அறிந்த உண்மையை நெறியான வாழ்வினை பின்பற்றினால் முக்தி அடையலாம் என்பதனையே சித்தர்கள் தம் பாடல்களில் வற்புறுத்தினர். பொருளாசையை குறித்து

“நாடுநகர் வீடுமாடு நற்பொருளெல்லாம்

நடுவன் வரும்பொழுது நாடிவருமோ

கூடுபோன பின்பு அவற்றால் கொள்பய னென்னோ” (Arivoli, 2012)

என்னும் பாடலால் பாம்பாட்டிச் சித்தரும்

“மாடு கன்று செல்வமு மனைவிமைந்தர் மகிழவே

மாடமாளி கைப்புறதடதில் வாழுகின்ற நாளிலே

ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே

உடல்கிடந்த துயிர்கழன்ற வுண்மைகண்டு முணர்கிலீர்”

என்று சிவவாக்கியரும் விளக்குகின்றனர் (Arivoli, 2012).

## யாக்கை நிலையாமை

மாடு கன்று செல்வம் மனைவி பிள்ளைகள் முதலியவற்றுடன் கூடி மகிழ்ச்சியடைந்து மாட மாளிகைகளிலும் உப்பரிகைகளிலும் வாழ்ந்தாலும் இறுதியில் இறக்கும்பொழுது யார் ஒருவரும் உடன் வருவதில்லை என்பதையும் வாழ்வு நிலையற்றது என்ற உண்மையை

“மக்கள் பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்

மாளும்போது கூட அவர் மாள்வதில்லையே”

என்னும் பாடலால் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகின்றார் (Achamuni nayanaar, 2015). வேண்டியதை ஏற்கும் மனம் வேண்டாதவற்றை தவிர்க்கவும் வேண்டும் என்பதை அகந்தையும் செருக்கும் அகற்றப்பட வேண்டியன பொய் வேடமும் பொல்லாத பேச்சும் புறக்கணிக்கப்பட வேண்டும். சாதி சமயப் பூசல்களையும் பொல்லாங்குகளையும் வெறுத்தொதுக்க வேண்டுகிறார்கள் சித்தர்கள்.

தீய குணம் உடையவர்களோடும் சேராதீர்கள் எனவும் சித்தர்கள் அறிவுறுத்துகின்றனர். அவ்வாறு சேர்ந்தால் அடையும் தீமைகளை மச்சமுனி தம் பாடலில் பின்வருமாறு விளக்குகின்றார்

“கசட னுறவைக் காட்டுகிறேன் மைந்தா

நிசமாப் பிரம்ம நிலையிது வென்று

கிராமஞ் சுழியைக் கிருபையால் காட்டி

திரமா மிதுவெனச் செப்புவான் பாரே” (Achamuni nayanaar, 2015)

## பிறவித் துயர் போக்கும் அருமருந்து

வேறுபாடு கருதாது அனைத்தையும் சமமாக மதிக்கத் கருதும் மனப்பக்குவம் பிறவித் துயரத்தினைப் போக்கும் அருமருந்தாகும்.

“பிறவி தீர வென்றால்

பேதம் பண்ணாதே

சாதி பேதமில்லை

தானாகி நின்றவர்கே

ஓதி உணர்ந்தாலும்

ஒன்றுந்தான் இல்லையடி”

“பாபஞ் செய்யாதிரு மனமே நாளை

கோபஞ் செய்தே யமன் கொண்டோடிப் போவான”

“எதையும் அல்லாது யாரையும் பழித்துச் சொல்லாதே என்பதை

தூடண மாகச் சொல் லாதே” (Arivoli, 2012)

## நல்லோர் நட்பு

நல்லோர்களை விட்டு விலகாதே என்றும் முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றையும் தவற விடாதே என்றும் பொல்லாத செய்கைகளில் ஒன்றையும் மேற்கொள்ளாதே என்றும் தம் பாடலால் விளக்குகின்றனர்

“நல்லவர் தம்மைத் தள் ளாதே அறம்

நாலெட்டில் ஒன்றேனும் நாடித் தள்ளாதே

பொல்லாங்கில் ஒன்றுங் கொள் ளாதே”

“பிச்சையென் றொன்றுங் கேளாதே”

“கூட வருவதொன்றில்லை” (Arivoli, 2012)

## முடிவுரை

சமுதாயத்தை சீர்திருத்த வந்த சீர்மையாளரே சித்தர்கள். ஆறியாமை வழி உழன்ற மக்களை அறிவியல் வழி ஆளாக்க முயன்றவர்கள் சித்தர்கள். விலங்கினங்கள் கூட தம்மினத்தைத் தாமே அடித்துக் கொள்வதில்லை. ஆனால் மனித இனம் மட்டுமே சாதி சமயம் சாத்திரங்கள் சடங்குகள் என்னும் பெயரால் தம்மினத்தை வாட்டி வதைக்கின்றது. இம்மானிடத்தை நல்வழிப்படுத்த வந்த சித்தர்கள் தம் பாடல்கள் வழி அவற்றையெல்லாம் எதிர்த்தனர் என்பதை குறித்தே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## References

Achamuni nayanaar, (2015) Thirumanthiram, Manivasagar Pathippagam, Chennai, India.

Arivoli, A. (2012) Siddhar padalkal mollamum uraiyum, Kazhaga Velliyeddu, Chennai, India.

Jeyaprakash, (2015) Aranketriya aaivukal, Manivasagar Pathippagam, Chennai, India.

Kalayana Sundaranar, (2012) Siddha markam, Saradha Pathippagam, Chennai, India.

Ramachandra sharma, (2012) Kambar Tamil Agarathi, New Century Book House, Chennai, India.

Susivalli, (2012) Samaya Sollalagarathi, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License